

திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பகுதி பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் பவள விழா அறிவாலயம் முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், மாவட்டஇளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ் வரவேற்புரையில் வடக்கு மாநகரச் செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாநகர அமைப்பாளர்கள் எஸ்.முத்துக்குமார் திருப்பூர் வடக்கு, எம்.எஸ்.ஆர்.ராஜு திருப்பூர் தெற்கு உள்பட மாவட்ட துணை அமைப்பாளர்கள் த.சசிகுமார், த.சசிகுமார் ஞானசிகாமணி, ப.ரவிச்சந்திரன், செ.ராஜசேகரன், உ.லிங்கேஸ்வரன், வடக்கு மாநகர துணை அமைப்பாளர்கள் ஆ.வஞ்சிமுத்து, அ.பார்த்திபன், ந.தியாகு, தெற்கு மாநகர துணை அமைப்பாளர்கள் ம.அசோக்குமார், கா.சையது அபுதாஹிர், மு.விக்னேஷ் குமார் க.திருநாவுக்கரசு கு.அரவிந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்,பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு,தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் டி.அழுதரசன், சமூக வலைத்தள பயிற்சியாளர் அன்பகம் இளமாறன் ஆகியோர் சமூக வலைதள பயிற்சி அளித்தனர்.உடன் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், தொகுதி பார்வையாளர் எவரஸ்ட் நரேஷ்,தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள். மகேஷ்குமார், கோஸ்வரன், தங்கசெழியன்,நாசர்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்தார்த்தன், ஒன்றிய கழக செயலாளர்கள்,பேரூர்கழக செயலாளர்கள்,மற்றும் 300 க்கும் மேற்பட்ட பாக இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டம் – ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில்

# ‘ஊட்டச்சத்தை உறுதி செய்’ திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்து பெட்டகங்கள்!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தாய்மார்களுக்கு வழங்கினார்!

ரிஷிவந்தியம், நவ.24-

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் பகண்டை கூட்டு சாலையில் அமைந்துள்ள ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் 2ம் கட்ட ஊட்டச்சத்தை உறுதி செய் திட்ட துவக்க விழா 20.11.2024 - புதன்கிழமை அன்று நடைபெற்றது, இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை தாங்கினார், ரிஷிவந்தியம் ஒன்றிய குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் நிரஞ்சனா வரவேற்றார், ஒன்றியக் குழு தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், துணைத் தலைவர் சென்னம்மாள் அண்ணாதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பெருமாள், துரைமுருகன், பாரதிதாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் கலந்து கொண்டு ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் கீழ் 06 மாத ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்களை 583 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கினார்.

இதன்பின் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் பேசுகையில்:- திராவிட மாடல் நல்லாட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், சமூக நீதி காவலர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊட்டச்சத்தை உறுதி செய் கட்டம்2 திட்டத்தினை சென்ற வாரம் தொடங்கி வைத்தார்கள், இதில் குழந்தைகள், கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாட்டினை உறுதுணையாக சரிசெய்வதற்கென இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கு சத்தான உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது,இந்த உணவில் முக்கியமாக குழந்தைகள் வளர்ச்சிக்கு தேவைப்படும் புரதச் சத்து நிறைந்துள்ளது, குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துமாவில் ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் புரதம், வைட்டமின்கள், இரும்பு சத்து மற்றும் இதர சத்துக்களும் சத்துமாவில் உள்ளது, இவைத்தவிர தாய்மார்களும் தங்கள் இல்லங்களில் குழந்தைகளுக்கு தேவையான புரதச்சத்து உணவுகளை வழங்க வேண்டும்,

குழந்தைகளுக்கு இப்போது தேவையான ஊட்டச்சத்து உணவுகளை வழங்கினால் தான் எதிர்காலத்தில் எவ்வித குறைபாடுமின்றி நிறைந்த உடல் நலமும் மன நலமும் இருக்கும்,வளர்ச்சி குறைவான குழந்தைகளுக்கு கல்வி உள்ளிட்ட அடிப்படை திறன்கள் கற்றுக்கொள்வது கூட சிரமமாக இருக்கும்,எனவேதான் ஒவ்வொரு மாதமும் குழந்தைகளின் எடை, உயரம் ஆகியவை அளவிடப்பட்டு குழந்தைகளின் வளர்ச்சி சரியான அளவில் உள்ளதை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது, குறைபாடு கண்டறியப்பட்டால் அக்குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது,

பெண்கள் கர்ப்பிணி தாய்மார்களாக இருக்கும் போது தேவையான அளவு ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ள வேண்டும், இதன் மூலம் மட்டுமே எடைக்குறைவான குழந்தைகளை பெற்றெடுப்பது தவிர்க்கப்படும், எடைக் குறைவாகப் பிறந்த குழந்தைகளை மீட்டெடுப்பதற்கு அதிக கவனம் தேவைப்படுகிறது, ஒவ்வொரு பெண்களும் கர்ப்பக்காலத்தில் குறைந்தது 10 கிலோ எடையாவது அதிகரிக்க வேண்டும்,அப்போது தான் வயிற்றில் வளரும் குழந்தை ஆரோக்கியமாக

வளரும், எடைக்குறைவாக உள்ள பெண்கள் அதிக ஊட்டச்சத்து உணவுகளை உட்கொள்ள வேண்டும், அவ்வாறு உள்ள தாய்மார்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினை தொடர்பு கொண்டு உட்கொள்ள வேண்டிய உணவுப் பொருட்கள் குறித்து கேட்டறிய வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டு வருகிறது,இந்த ஊட்டச்சத்து பெட்டகத்தில் நெய் 500 மி.லி., உலர் பேரிச்சம் பழம் 1 கி.கி., ஊட்டச்சத்து பவுடர் 1 கி.கி., இரும்புச் சத்து திரவம் 2 பாட்டில்கள், பிளாஸ்டிக் கோப்பை 1, காட்டன் துண்டு 1, பிளாஸ்டிக் கூடை 1 ஆகியவை அடங்கியுள்ளன.

பெண் குழந்தைகள் நடுநிலைப்பள்ளி முதல் உயர் கல்வி வரை பயிலும் பருவத்தில் சத்தான ஊட்டச்சத்து உணவுகளை உட்கொண்டால் தான் கர்ப்பக்காலத்தில் குழந்தைக்கு தேவையான ஊட்டச்சத்து கிடைக்கும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுகளை குழந்தைகளும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் உணவுகளை கர்ப்பிணி தாய்மார்கள் மட்டுமே உட்கொள்ள வேண்டும், இத்திட்டதின்கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்களுடன் தினசரி உட்கொள்ளும் ஊட்டச்சத்து உணவுகளையும் கர்ப்பிணி தாய்மார்கள் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும், மேலும் ரிஷிவந்தியம் தொகுதியில் ஒவ்வொரு மாதமும் 2,800 கர்ப்பிணிகளுக்கு வீடு வீடாகச் சென்று திமுக சார்பில் ஊட்டச்சத்து பெட்டகங்களை கொடுத்து வருகிறோம், இதுவரை 7,000 பேர் தொகுதியில் பயனடைந்துள்ளனர் என்று கர்ப்பிணி தாய்மார்கள் முன்னிலையில் பேசினார்.

இதனைத் தொடர்ந்து நமது திராவிட மாடல் அரசின் திட்டங்களை ஏழை எளிய நடுத்தர வர்க்க மக்களுக்கு சென்று அடையும் வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி பாசார் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.இராஜேஸ்வரி, க/பெ.இளையராஜா என்பவர் இத்திட்டம் குறித்து தெரிவித்ததாவது:

எனது பெயர் இராஜேஸ்வரி நான் பாசார் கிராமத்தில் வசித்து வருகிறேன்,நான் கர்ப்பமான 3 மாதத்தில் எங்களது பகுதி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவரிடம் காண்பித்து கர்ப்பிணி அட்டை போட்டுக் கொண்டேன்,தொடர்ந்து எங்கள் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்தில் மாத மாதம் ஊட்டச்சத்து சத்து மாவு பாக்கெட்டுகள் வழங்கினார்கள், மேலும் நகர ஆரம்ப சுகாதார மையத்தில் எனது குழந்தை வளர்ச்சியை மாதம் ஒரு முறை பரிசோதித்தனர், எனது குழந்தைக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டது, எனது குழந்தையின் எதிர்காலம் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தும் இந்த ஊட்டச்சத்து உறுதி செய் திட்டத்தின்கீழ் பயனடைந்த என்னை போன்ற தாய்மார்கள் சார்பாக நிறைந்த மனதுடன் எனது

நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்த விழாவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் துரைமுருகன், ஜெகநாதன்,மாவட்ட கவுன்சிலர்கள் கோவிந்தராஜன், அமிர்தம் ராஜேந்திரன், ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் ராஜேந்திரன், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, அசோக் குமார், பேரூர் கழக செயலாளர் ஜெய் கணேஷ், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.கே.ஆர்.ராஜீவ் காந்தி, உதயா, பாலாஜி பூபதி, ஊராட்சி மன்ற தலைவர் தீபா அய்யனார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தினகரன் பாபு, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கல்பனா மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கர்ப்பிணி தாய்மார்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியம், மின்னக்கல் மற்றும் தேங்கல்பாளையம் பகுதியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பிரபு ஏற்பாட்டில் பா.ஜ.க. மாவட்ட இளைஞர் அணி பொதுச் செயலாளர் டி.கோவிந்தராஜ் தலைமையில் ஒன்றிய பா.ஜ.க. இளைஞர் அணி நிர்வாகிகள் பெரியசாமி, சங்கர், ராமு மற்றும் பா.ஜ.க. மகளிரணியைச் சார்ந்த கோகுலபிரியா, தீபிகா, கலையரசி, கௌசிகா உட்பட 30 பேர் பாஜகவிலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், வெண்ணந்தூர் ஒன்றிய கழக செயலாளர் ஆர்எம்.துரைசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் விஜயபாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டத்தில் 71வது கூட்டுறவு வாரவிழா!

# அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

## பூண்டி.கலைவாணன் - ஏ.கே.எஸ்.விஜயன் - வை.செல்வராஜ் எம்.பி.பங்கேற்பு!

திருவாரூர், நவ.24-

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், எடையூர் சங்கேந்தி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தலைமை வகித்தார்.

அப்போது 3553 பயனாளிகளுக்கு ரூ.24 கோடியே 34 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன், க.மாரிமுத்து, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்ததாவது,

திராவிட மாடல் அரசின் ஈடு இணையற்ற தலைவர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருகிறது. அனைத்திந்திய அளவில் ஆண்டுதோறும் முன்னாள் இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் திங்கள் 14ஆம் தேதி முதல் 20ம் தேதி வரை நாடு முழுவதும் அனைத்து இந்திய கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டுவருகிறது.

திராவிட மாடல் ஆட்சியில் தான் “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்து விதமான நலத்திட்டங்களும் சென்றடைகின்றது. திராவிட மாடல் ஆட்சியில் முதன்முறையாக திருவாரூரிலும், மன்னார்குடியிலும் சிப்காட் தொழிற்சாலை அமைவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்றுவருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பில் தான் ஒட்டுமொத்த டெல்டா பகுதிகளும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டது. விவசாய மக்களின் பொருட்களை மதிப்புக்கூட்டி மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி அதன் மூலம் விவசாயி களுக்கு நல்ல வருவாயினை ஈட்டவும், விவசாய மக்களின் குழந்தைகளுக்கு நல்ல ஒரு வேலை வாய்ப்பினை வழங்கிடவும் அதனை உறுதி செய்திடவும் நமது கடமையென தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். வரலாற்றிலேயே முதன் முறையாக திருவாரூர் மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை நிறுவி 15000 மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்ய உள்ளார்கள். மண்ணின் மைந்தர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசில் திருவாரூர் மாவட்டத்தில் விவசாய மதிப்புக்கூட்டுப் பொருட்களின் தொழிற்சாலைகளும், பெண்கள் அதிகளவில் பணிபுரியும் வகையிலும் தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறார்கள் என தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.


மேலும், திருவாரூர் மாவட்டத்தில்; 71வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவின் இறுதி நாளான 20.11.2024- புதன் கிழமை “கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைதல்” என்ற தலைப்பில் கொண்டாடப்பட்டது. கூட்டுறவு வார விழா வினையொட்டி 3553 பயனாளிகளுக்கு ரூ.24 கோடியே 34 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகள் மற்றும் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு நிறுவனங்களுக்கு கேடயங்களும், போட்டிகளில் வெற்றி பெற்ற கூட்டுறவு மேலாண்மை நிலைய மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளையும், திருவாரூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் புதியதாக கட்டப்பட்டுள்ள 14 புதிய கட்டடங்களை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசு, மாவட்ட துணை செயலாளர் ஏ,எஸ்.கார்த்திக், ஒன்றிய செயலாளர்கள் வி.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல்,ப.பிரகாஷ், இரா.மனோகரன்,டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு,கே.வி.கே. ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் கலைவனை மோகன், நகர்மன்ற தலைவர்கள் கவிதாபாண்டியன், மும்தாஜ் நவாஸ்கான், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி – அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு விழா!

## மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் அறிக்கை!



நாமக்கல், நவ.24-

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, சூரியம்பாளையத்தில் கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதியதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகம் திறப்புவிழா இன்று (24.11.2024) காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர்-தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், நகரமைப்பு மண்டல திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எம். மதுரா செந்தில் தலைமையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவாசன், நகர கழக செயலாளர் டி.கார்த்திகேயன், நகர்மன்ற தலைவர் எஸ்.நளினி சுரேஷ்பாபு, ஒன்றிய கழக செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல் ஆகியோர் முன்னிலையில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் கலைஞர் நூலகத்தை திறப்பு விழா செய்து சிறப்புரையாற்றவுள்ளார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் துணை அமைப்பாளர்கள் பூக்கடை சுந்தர், நவலடி ராஜா, கதிரவன், மல்லை ஜெகதீஸ்குமார், கார்த்திகேயன், முரளி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள திறப்பு விழாவில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மதுரா செந்தில் தெரிவித்துள்ளார்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி முகையூர் வடக்கு ஒன்றியம், மணம்பூண்டி ஒன்றியம், அரங்கண்டநல்லூர் பேரூர், திருக்கோவிலூர் நகரம், திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வாக்குச்சாவடி சிறப்பு முகாம்களை மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி ஆய்வு மேற்கொண்டு கழக பி.எல்.ஏ2 நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். தலைமைக் கழக மேற்பார்வையாளர் க.கார்த்திகேயன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி செல்வராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ஜி.இரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் எஸ் அன்பு, பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எம்.ஆர்.இராஜிவ்காந்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.